# கலைஞரின் தொலைநோக்குப் பார்வையும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வும்!



சென்ற 20 ஜூலை சனிக்கிழமை காலையில் மதுரையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் 20வது ஆண்டு நிறைவு விழா மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்து கொண்ட இந்திய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அவர்கள் மதுரை மாநகரில் அமைக்கப்பட்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை கட்டிடத்திற்கான அடிக்கல்லை அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2000இல் அடிக்கல் நாட்டினார் என தெரிவித்து தனது உரையைத் தொடங்கினார்.

கலைஞர் அவர்கள் 1996இல் 4வது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு தமிழ்நாடு முழுவதும் நீதிமன்றக் கட்டிடங்கள் சரி செய்வதற்கும் புதிதாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் சிறப்பான நிதி ஒதுக்கீட்டினை நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து ஒதுக்கினார்.

அதன் வெளிப்பாடுதான் சென்னை எழும்பூரில் எழுப்பியுள்ள மிகப் பெரிய நீதிமன்ற கட்டிட வளாகம்.

தென்தமிழ்நாட்டு மக்களுக்கு தனது உரிமையை நிலைநாட்டிக் கொள்ள, தனது கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள, தனது சர்ச்சைகளைத் தீர்த்துக் கொள்ள, ஏழை, எளிய குடியானவனும் சென்னை உயர்நீதிமன்றத்துக்கு தென்தமிழ்நாட்டிலிருந்து வர வேண்டும். அந்த சங்கடங்களை உணர்ந்த கலைஞர் சென்னை உயர்நீதிமன்றக் கிளையை மதுரையில் தொடங்க வேண்டும் என்று முயற்சி எடுத்தார்.

இதன் பிறகு இந்தியாவில் எங்கெங்கெல்லாம் உயர்நீதிமன்றக் கிளைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று ஆராய்ந்தார். அதன் பிறகு சென்னை உயர்நீதிமன்றத்துக்கும் மதுரையில் கிளைகள் தொடங்க வேண்டும் என்ற வேண்டுகோளை ஒன்றிய அரசுக்கும் முன் வைத்தார். அதற்கு பிறகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் அழைத்து டெல்லியில் ஒன்றிய அரசின் சட்டத் துறை அமைச்சர் மற்றும் பிற அமைச்சர்களை சந்தித்து மதுரை கிளை தொடங்க பெருமுயற்சி எடுத்து மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளையை உருவாக்க அதற்கான முயற்சியை தானே முன்னின்று செய்து ஒன்றிய அரசின் ஒப்புதலையும் பெற்றார். இதற்காகவே ஒன்றிய அரசால் சட்டத் துறை இணை அமைச்சரான வெங்கடபதி அவர்கள் பெரிதும் முன் நின்று டெல்லியில் அனுமதி பெற பாடுபட்டார்.

இதன் தொடர்ச்சியாக மதுரையில் இடம் தேர்வு செய்ய தானே முன் நின்று இடம்தேர்வினை செய்ய அரசு அதிகாரிகளையும் வருவாய் துறையினையும் சட்ட துறையினையும் முடுக்கி விட்டார். இதனைத் தொடர்ந்து அந்தக் கட்டிடம் எப்படி அமைய வேண்டும் என்று தானே நேரில் சென்று பார்வையிட்டு தன்னுடைய ஆட்சிக் காலத்தில் அதற்கான அடிக்கல் நாட்டினார்.

அதன் பிறகு கட்டிடங்கள் கட்டி முடித்து 2004ல் திறக்கப்பட்டு அதனுடைய 20 ஆண்டுவிழா அனைத்து நீதிபதிகளும், ஒன்று கூடி மதுரையில் அமைக்கப் பட்டுள்ள நீதிமன்ற அமர்வின் மூலமாக ஏற்பட்டுள்ள பயன்கள், தீர்ப்புகள் வழங்கப்பட்ட விதம், வழக்கறிஞர்கள் பயன்படுத்திய விதம், பயனடைந்த மக்கள், மதுரையின் சிறப்பு. கண்ணகியின் வழக்காடல், மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் பெருமை, மதுரை தமிழ் சங்கத்தின் பெருமை என அனைத்தையும் அனைத்து நீதிபதிகளும் உரையாற்றினார். தமிழ்நாடு முழுவதிலிருந்தும் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர். உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்ற நீதிபதிகள், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் என பலரும் கலந்து கொண்டு உரையாற்றி சிறப்பு சேர்த்தனர்.

மதுரையில் அமைக்கப்பட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றத்தின் அமர்வு எந்த அளவுக்கு பயனுள்ளது என்பதை கலைஞரின் தொலை நோக்கு பார்வையும் அவரால் உருவாக்கப்பட்டுள்ள மதுரை கிளை என்றும் எவராலும் மறக்க முடியாத ஒன்று. அதனால்தான் அந்த விழாவில் பேசிய தலைமை நீதிபதி கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார் என்பதை குறிப்பிட்டு பேசினார். அதன் தொடர்ச்சியாக இன்றும் நீதிமன்ற கட்டிடங்கள் விரிவு படுத்துவதிலும் உச்சநீதிமன்ற கிளை சென்னைக்கு கொண்டு வருவதிலும் திராவிட மாடல் அரசு தொடர்ந்து பணியாற்றி வருகிறது.



வழக்கறிஞர்
**வி.ஆர்.எஸ். சம்பத்**
ஆசிரியர், சட்டக்கதிர்

---

## தாம்பரத்தில் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

தாம்பரம், ஆக.6

தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாளை (7.8.2024 புதன்கிழமை) காலை 6.00 மணிக்கு நினைவில் வாழும் நம் நெஞ்சம் நிறைந்த தமிழின தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகரத்துக்கு உட்பட்ட 70 வட்டங்களிலும் கலைஞர் அவர்களின் திருஉருவப்படம் வைத்து மலர்களால் அலங்கரித்து மாலை அணிவித்திடு மாறும் ஏழை எளியோருக்கு மாணவ -மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் கலைஞர் அவர்களின் நினைவுகளை போற்றிடும் வகையில் ஒளி ஒலி அமைத்து பேச்சுக்களையும், பாடல்களையும் அமைத்திடு மாறும் அதன்பின் மேற்சொன்ன நிகழ்வுகளை முடித்துவிட்டு தாம்பரம் மாநகர கழகத்தின் சார்பில் எனது தலைமையில் (எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ.) மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் காலை 6.00 மணி அளவில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து இதய அஞ்சலி செலுத்த உள்ளோம்.

அதைத்தொடர்ந்து தலைநகர் சென்னையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்திற்கு சென்று மாலை அணிவித்து வணக்கம் செலுத்த உள்ள கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்து கொள்கின்ற அமைதி ஊர்வலத்திலும் அதிக வாகனங்கள் ஏற்பாடு செய்து கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

## வணக்கம் செய்வோம் வாரீர்!



வங்கக் கடலோரம் எங்கும் தமிழ்வளர்த்த
சிங்கத் தமிழ்மகன் துயில்கொள்ளும் இடம்
சென்று வணக்கம்செய்வோம்...
பங்கம் தமிழுக்கு வந்த போதெல்லாம்
பொங்கி யெழுந்த நம்கலைஞர் துயிலுமிடம் சென்று
வணக்கம்செய்வோம்...

சுழ்ந்த இருளில் சமுதாயம் சீர்கெட்டு
வீழ்ந்த தமிழகத்தை விரைந்து நிமிர்த்திட்ட
தாழ்வில்லா நம்கலைஞர் சமநீதி கண்டவர்
ஆழ்ந்து துயில்கொள்ளும் கடலோரம் சென்றுநாம்
வணக்கம்செய்வோம்...

தொழிலாளி உயர்வதற்கு தொழிற்சாலை பெருகுதற்கும்
வழிகண்டு வகைசெய்து வறுமைதனை நாட்டினில்
குழிதோண்டி புதைத்திடவே குன்றாது உழைத்திட்ட
வழிமாறாத் தலைவர் துயில்கொள்ளும் இடம் சென்று வணக்கம்செய்வோம்...

தகுதியுள்ள பெரியாரின் தன்மானம் போற்றும்
பகுத்தறிவுக் கொள்கைதனை பாரெல்லாம் பரப்பிடவே
வெகுண்டெழுந்து தமிழகத்து வீதியெலாம் மேடைபோட்டு
தொகுத்தளித்த கலைஞரின் துயிலுமிடம் சென்றுநாம் வணக்கம்செய்வோம்...

மாநிலத்து உரிமைதனை மத்தியிலே உள்ளவர்கள்
தானழித்த போதெல்லாம் தடுக்கின்ற போர்க்களத்தில்
நாணல்போல் வளையாமல், நடுங்காமல் நேர்நின்று
மானத்தை காத்தகலைஞர் துயிலுமிடம் சென்றுநாம்
வணக்கம்செய்வோம்...

மக்களாட்சி மாண்பினை மறுக்கின்ற அரசை
திக்கெல்லாம் மிசாவிரைந்து மிதித்தபோது
வெஞ்சிறையில்
பக்கம்நின்று தொண்டர்களை அடித்து துவைத்தபோதும்
தக்கபடி எதிர்நின்ற போர்மறவர் துயிலுமிடம் சென்று
வணக்கம்செய்வோம்...



**கவிஞர். நெல்லை குமார சுப்பிரமணியம்**

---

# தென்காசி வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா பங்கேற்பு!

*தென்காசி.ஆக.7*

*முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைதலைவர் பத்மநாதன் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு யு.எஸ்.டி.சீனிவாசன், பரமகுரு,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி,மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பகவிநாயகம்*

*மாவட்ட துணை செயலாளர்கள் ராஜதுரை, மனோகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நகர செயலாளர் பிரகாஷ் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் இல.சரவணன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.*

*இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.*

*நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், கடற்கரை, பொன்.முத்தையா பாண்டியன், சேர்ம துரை, கிறிஸ்டோபர், பூசைபாண்டியன், பெரியதுரை, வெள்ளத்துரை, ராமச்சந்திரன், குணசேகரன், பால்ராஜ்,*

*பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன், தேவா என்ற தேவதாஸ், பத்திரம் சாகுல் ஹமீது, மகேஸ்வரி, பராசக்தி, புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி, பேரூர் செயலாளர்கள் ரூபி பால சுப்பிரமணியன்,கே.டி.சி. குருசாமி, மாரிமுத்து, சேது சுப்பிர மணியன், வழக்கறிஞர் அணி தலைவர் முத்துராம லிங்கம், சிறுபான்மையினர் அணி தலைவர் மரிய லூயிஸ் பாண்டியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் பிச்சையா, உதயகுமார் நாகூர்கனி, மணிகண்டன், பசுபதி பாண்டியன், சரவணகுமார், சந்திரன், மாடசாமி, சரவணன், நகர துணை செயலாளர்கள் முத்துக்குமார், சுப்புத்தாய், தொ.மு.ச.மைக்கேல் நெல்சன், பண்டாரகண்ணு, உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.*

---

## காஞ்சிபுரத்தில் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்

காஞ்சிபுரம், ஆக.,5

முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, காஞ்சிபுரத்தில் இன்று மாபெரும் அமைதிப் பேரணி மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகின்றது. இந்த அமைதிப் பேரணியில் மாநகரக் கழகத் தோழர்கள் அனைவரும்தவறாமல் கலந்து கொள்ளும் படி மாநகரக் கழகச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு மக்களுக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து மக்கள் பணி மேற்கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலைஞர் அவர்களின் சிந்தனையில் தீட்டப்பட்டு செயல்படுத்திய திட்டங்கள் ஏராளம். இன்றைக்கும் தமிழன் தலைநிமிர்ந்து வாழ்கிறான் என்றால் அதற்கு முழு முதற் காரணம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரே காரணமாக அமைந்திருக்கின்றனர்.

தந்தை பெரியார் பகுத்தறிவைப் போதித்தார், பேரறிஞர் அண்ணா கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை நமக்களித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் தமிழே தன் மூச்சு என்று வாழ்ந்தவர் ஆவார். அப்பேற்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (7.8.2024 புதன் கிழமை) காலை 7 மணிக்கு காஞ்சிபுரம், காந்தி சாலையில் உள்ள தந்தை பெரியார் நினைவு தூணில் இருந்து அமைதி ஊர்வலம் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் புறப்பட்டு மாவட்டக் கழக அலுவலகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இவ்வாறு மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் : கழகத்தலைவர் தலைமையில் நடைபெறும்

# அமைதிப் பேரணியில் தொழிலாளர்கள் திரளாகப் பங்கேற்பீர்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை

*சென்னை,ஆக.7-*

*தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தந்தை பெரியாரின் கரம் பிடித்து, தென்னாட்டு காந்தி இந்நாட்டு இங்கர்சால் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் இதயத்தை இரவலாகப் பெற்று, இந்திய நாட்டின் அரசியலையே தமிழகம் நோக்கி திரும்பிப் பார்க்க வைத்த பாட்டாளிகளின் பாதுகாவலர், தொழிலாளர்களின் பாதுகாப்பு அரண், கழகத் தலைவராக சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல் அகில இந்திய மக்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த, அமைப்புசார்ந்த, அமைப்பு சாரா தொழிலாளர்களின் நல்வாழ்விற்காகப் பாடுபட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து நீங்கா துயில் கொண்ட நாள் ஆகஸ்ட் 7.*



*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு இன்று (07.08.2024) கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காலை 7.00 மணிக்கு சென்னை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அருகிலிருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெறுகிறது.*

*இந்த அமைதிப் பேரணியில் தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்க நிர்வாகிகள் அனைவரும் கருப்பு சட்டை அணிந்து பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

*மேலும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள இணைப்புச் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்கள் ஆலை வாயிலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து வைத்து அஞ்சலி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*





திருப்பத்தூர் ஒன்றியம் திம்மணாமுத்தூர் ஊராட்சியில் ரூ.39லட்சம் மதிப்பீட்டில் உலர்களத்துடன் கூடிய தரம்பிரிப்புக் கூடம் (ம) நியாயவிலைக் கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பட்ட க.தர்பகராஜ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி தலைமையில் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேளாண் துணை இயக்குனர். சிவக்குமார், வேளாண் அலுவலர்கள்(வாணிகம்) முருகதாஸ், வதா, ராஜேஷ் ஒன்றியக்குழு தலைவர்.விஜயாஅருணாசலம், ஒன்றிய கவுன்சிலர். எம்.ஜி.காந்தி, மா.க.இ.ப.பே.அ.அன்பழகன், ஆவின் இயக்குனர்.சின்னபையன், மாவட்ட ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர்.எஸ்.சி.விஜயகுமார், ஜெயகோபி, ராமலிங்கம், மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஹைவேவிஸ் எம். மனோகரன்
### ஆகஸ்ட் 7 (2017)



**இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த மலைப் பிரதேசமான ஹைவேவிஸ் பேரூர்க் கழகச் செயலாளராகவும் – இருபத்தெட்டு ஆண்டுகள் ஒன்றுபட்ட மதுரை மாவட்ட தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

'ஃபின்டெக்' துறையில் செயல்படும் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 7 -

'ஃபின்டெக்' நிறுவனங்களின் வரிக் கொள்கைகள் தொடர்பான தேவைகள் மற்றும் அவர்கள் சந்திக்கும் சவால்களைப் புரிந்துகொள்வதற்காக, ஒன்றிய நிதி அமைச்சகம் ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என மக்களவையில் எழுத்துப்பூர்வமான பதில்களுக்காக கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் வருமாறு :

FinTech துறையில் துறையில் செயல்படும் நிறுவனங்களுக்கு ஏதேனும் வரிச் சலுகைகள் உள்ளதா மற்றும் FinTech துறையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியை ஊக்க வைக்க வரிக் குறைப்புக்களை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசாங்கம் ஏதேனும் திட்டமிட்டுள்ளதா என கேள்வி எழுப்பினார்.

FinTech துறையில் குறிப்பிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான Blockchain, AI மற்றும் டிஜிட்டல் பேங்கிங் கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு ஏதேனும் வரிச் சலுகை ஒன்றிய அரசு வழங்க முன்மொழிகிறதா, அப்படியானால் அந்தச் சலுகைகளைப் பெற FinTech நிறுவனங்கள் என்ன தகுதி பெற வேண்டும் என கேள்வி எழுப்பினார்.பொருளாதாரம் மற்றும் தொழில்துறை, இத்தகைய வரிச் சலுகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் என்ன நன்மைகளை பெறும் என தெரிந்துகொள்ள அரசாங்கம் ஏதேனும் ஆய்வு மேற்கொண்டுள்ளதா, மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்

FinTech நிறுவனங்களின் வரிக் கொள்கைகள் தொடர்பான தேவைகள் மற்றும் அவர்கள் சந்திக்கும் சவால்களைப் புரிந்துகொள்வதற்காக, FinTech நிறுவனங்களுடன் ஒன்றிய அரசு ஏதேனும் கலந்தாலோசனை மேற்கொண்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

---

அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு : உச்ச நீதிமன்றத் தீர்ப்பு – முதல்வருக்கு நன்றி!

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## தமிழ்நாடு முழுவதும் திருவுருவப் படத்திற்கு ஆதிதிராவிடர் நலக் குழுவினர் மலரஞ்சலி! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஆக. 7-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம், நேற்று முன்தினம் (5.8.2024), சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையில், ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர் அமைச்சர் மா.மதிவேந்தன், இணைச் செயலாளர்கள் மருதூர் ஏ. ராமலிங்கம், புஷ்பராஜ், வி.பி. இராசன், திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகி யோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்கள் பி. துரைசாமி, சி.தசரதன், மாரியப்பன் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட தீர்மானங்கள் பின்வருமாறு

"சமூகநீதியின் தொட்டில்" என்றழைக்கப்படும் தமிழ் நாட்டில், ஒடுக்கப்பட்ட இனத்தின்மீது, குறிப்பாக ஆதிதிராவிடர்மீது ஆதிக்கச் சக்திகள் பல்முனைத் தாக்குதல் நடத்திய போதெல்லாம், அதனை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து, போராடி வெற்றி பெற்று சமூகநீதியை காத்து வருவதோடு, கீழ்த்தட்டு மக்களை கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் மேலே கொண்டு தொடர்ந்து போராடி வரும் தி.மு.கழகத்தின் தலைவரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு - தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது, "பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைக்க; பணி புரிவோம் தொடர்ந்து!" என்று சொன்னதோடு நிற்காமல், அருந்ததியக்கான 3 சதவிகித உள்ஒதுக்கீடு என்ற சட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அதனை நடைமுறைப்படுத்தினார்.

இந்த உள்ஒதுக்கீட்டின் காரணமாக, காலங்காலமாக அடக்கி வைக்கப்பட்ட அருந்ததியர் இன மக்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முன்னேற்றம் அடைந்ததோடு, சமூக பொருளாதார முன்னேற்றம் அடைந்தனர்.

அருந்ததியருக்கு அளித்த உள்ஒதுக்கீட்டினை பொறுத்துக் கொள்ளாதவர்கள் இச்சட்டம் செல்லாது என்று அறிவித்திட வேண்டுமென அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டு எதிரான வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற போது, அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு பாதுகாக்கப் பட வேண்டும் என்பதற்காக, மூத்த வழக்கறிஞர்கள் நியமித்து திறம்படக் கருத்துக்களை எடுத்துரைத்து, அந்த முன்னெடுப்புகளால் "அருந்ததியருக்கான உள் ஒதுக்கீடு செல்லும்" என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றத்தில் பெற்றுத் தந்த 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கொள்கையில் அடிப்படையில் "திராவிட ஆட்சி" நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக் குழுவின் மாநில நிர்வாகிகள் கூட்டம் தனது பாராட்டுக்களையும், மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.'

அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டு எதிரான வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற போது, அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு பாதுகாக்கப்பட்டே ஆக வேண்டும் என்ற உறுதியுடன், மூத்த வழக்கறிஞர்கள் நியமித்து, அவர்கள் வாதாடி, அந்த முன்னெடுப்புகளால் "அருந்ததியருக்கான உள் ஒதுக்கீடு செல்லும்" என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றத்தில் பெற்றுத் தந்த 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கொள்கையில் அடிப்படையில் "திராவிட ஆட்சி" நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஒப்புதல் பெற்று, அவருக்கு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக் குழுவின் சார்பில் பிரம்மாண்டமான ஒரு மாபெரும் பாராட்டுக் கூட்டம் நடத்துவதென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 6-ஆம் ஆண்டு நினைவு நாளான ஆகஸ்ட் 7-ஆம் தேதி அன்று மாவட்டம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் என அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படம் மற்றும் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுமென மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கேரளா மாநிலம், வயநாடு மலைப்பகுதியில் நிலச்சரிவில் சிக்கி உயிரழந்த மக்களுக்கு ஆழ்ந்த இரங்கலை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்வதோடு,ம் வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பாக ரூ. 5 கோடி நிவாரண நிதி வழங்கிய நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

ஆதிதிராவிடர் நலக்குழு ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளை நியமனம் செய்வது தொடர்பாக, அந்தந்த மாவட்ட அமைப்பபாளர்கள், தத்தமது மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்களை தொடர்பு கொண்டு, நிர்வாகிகள் பட்டியலை விரைந்து பெற்று, மாநிலச் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

முத்தமிழறிஞர் கலைஞர் 6வது நினைவுநாள் அமைதிப் பேரணி! கலைஞர் புகழ்போற்றி

# கழகத் தலைவர் தலைமையில் அணி வகுப்போம்!

## சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (ஆக.7-புதன்கிழமை)காலை 7 மணிக்கு சென்னை அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்டத்தினர் பெருந்திரளாக பங்கேற்க மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"முத்தமிழறிஞர் கலைஞர்" எனும் இந்த சொற்றொடர் இருபதாம் நூற்றாண்டையும், இருபத்தொன்றாம் நூற்றாண்டையும் இணைக்கும் ஒரு வரலாற்றுப் பாலமாக தீபகற்ப இந்தியாவில் திகழ்கிறது. 'கலைஞர்' எனும் இந்த ஒற்றைச் சொல்தான் கடந்த எண்பது ஆண்டு காலமாய் திரா



விடப் பொன்னாட்டின் தவிர்க்க முடியாத சரித்திரமாய் விளங்கியது.

தமிழ் இனம் வாழ, தமிழ்நிலம் தழைத்தோங்க, தன்னையே ஒரு கொடையாய் மானுடத்திற்கு எடுத்தளித்து, தன்னிகரில்லாத் தலைவராய், தன்மானப் புரட்சியின் தத்துவமாய் விளங்கினார். அவர்தான் இங்கு நிலவிய சாதி, இன பேத சாபக்கேடுகளை தகர்த்தெறிந்தார். முத்துவேலர் ஈன்றெடுத்த அந்த முதுபெரும் அறிஞர்தான் மூடத்தனத்தின் இழிவுகளை அகற்றி, முடைநாற்றம் வீசும் பழைய பஞ்சாங்கத்தின் அவலங்களை, நீக்கி தமிழர்க்கு ஒரு தலைநிமிர்வை வழங்கினார். அந்த சுயமரியாதைத் தத்துவ ஆசான்தான், தமிழ்பூமியின் திசையெங்கும் சமத்துவத்தை, சகோதரத்துவத்தை சமூகநீதியை ஓயாமல் முழங்கினார்.

அன்னை அஞ்சுகம் கருவறை சுமந்த 'கலைஞர்' எனும் நெருப்புதான், ஏற்றத்தாழ்வு எனும் முட்காட்டை எரித்து, முப்போதும் இங்கு 'அமைதி மலர்க்காட்டின்' ஆனந்தத் தென்றல் வீசுவதற்கு அடித்தளமிட்டது. கலைஞரின் எழுதுகோல்தான் கயமையின் முதுகெலும்பை முறித்துப் போட்டது, கலைஞரின் கரகரத்தக் அந்தக் காந்தக் குரல் தான் ஆரிய வஞ்சகத்தின் ஆணிவேரில் வெப்பக் கோடரியை இறுக்கியது.

தந்தைப் பெரியாரின் மாணவராய், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் தம்பியாய் அவர்கண்ட களங்கள் ஒன்றிரண்டல்ல, அது வட்டத்திற்குள் அடைபடாத வானம் போன்றது. கைகளில் அள்ளி காணமுடியாத கடல்போன்றது. தமிழ் இனம் வாழ அவர் தன்னை ஒரு தியாக மெழுகாய் ஆக்கிக்கொண்டார்.

வள்ளுவன் காட்டிய வழியில் நின்று - இனம் - மொழிக் களத்தில் தன்னை ஒரு படைவீரனாய் மாற்றிக்கொண்டார். தனக்கென்ற வாழாத ஒரு தகைசால் தலைமையின் அத்தனை இலக்கணமும் கலைஞர் அவர்களையே சாரும். வஞ்சகங்களையும், துரோகங்களையும் தம் நெஞ்சுரத்தால் வென்று காட்டி இன்று நூற்றாண்டு போற்றும் தலைவராய் விளங்குகிறார் எனில் அது தமிழ்நாடு செய்த பகுத்தறிவுப் புரட்சியின் வெளிப்பாடு.

ஐந்து முறை நாடாண்ட அந்த ஐந்தமிழ்ச் சூரியன் ஆற்றிய தொண்டுகளும், சேவைகளும் சொல்லி முடிக்க முடியாத சாதனையின் பக்கங்களாகும். நாடு உயர பலநூறு திட்டங்கள் தீட்டினார். நாட்டுமக்கள் தலைநிமிர பல்லாயிரம் ஏடுகள் நிரம்பிய சட்டங்கள் தீட்டினார். கலைஞரால் நாடு வளம்பெற்றது. கலைஞரைக் கண்டு இந்திய ஒன்றியங்கள் வணங்கிப் போற்றின. காரணம் அவர் கொண்டுவந்த திட்டங்கள் இந்தியா முழுமைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கி, மாநிலங்கள் கடைப்பிடிக்கும் மகத்துவத்தைப் பெற்றிருந்தன.

மாநில சுயாட்சியின் தந்தையாகப் போற்றப்படும் முத்தமிழறிஞர்தான், மாநிலங்களின் உரிமைகளை மீட்டுத்தந்த மகத்தானத் தலைவராக விளங்கினார். அவர் இந்தியாவின் ஒளிவீசும் கிழக்காக இருந்தார். அவர் எல்லோர்க்குமான வானமாக, மழையாக, பூமியாக விளங்கினார். அதனால்தான் நாடும் அவரை கண்ணுக்குள் வைத்துப் போற்றிக்கொண்டாடுகிறது. கலைஞர் இயற்கையின் மடியில் கண்ணுறங்கச் சென்று ஆண்டுகள் ஆறு ஆனாலும், அவர் புகழ் கடுகளவும், நெல்முனையளவும் குறையவில்லை. அவற்றை நம் திராவிட மாடல் நாயகர், தமிழ்நாட்டின் முதல்வர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் கம்பீரமாய் முன்னெடுத் துச் செல்கிறார். தமிழ்நாடு எல்லார்க்கும் எல்லாம், அனைவருக்கும் அனைத்தும் என்ற இடம் நோக்கி வெற்றிநடைபோடுகிறது.

சென்னை அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புதன்கிழமை காலை 7 மணிக்கு அமைதிப் பேரணி புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வைத்து கழகத் தலைவர் அஞ்சலி செலுத்துகிறார். கலைஞர் துயில்கொள்ளும், இடம் நோக்கி சென்னை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், கழக மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய கழக செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகி கள்,

மாவட்ட, பகுதி, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, ஒன்றிய அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி துணைச் செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவைப் போற்றுவோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை விடுத்துள்ளார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் 6வது நினைவு நாளினையொட்டி

# முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையில் அமைதிப் பேரணி!

## தொண்டர் அணித் தோழர்களுக்கு தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் வேண்டுகோள்!

சென்னை, ஆக.7-

தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய வரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளான ஆகஸ்ட் 7, புதன்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள "அமைதிப் பேரணி"யில் சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு, சென்னை தெற்கு, சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் வடக்கு, திருவள்ளூர் தெற்கு, திருவள்ளூர் மத்திய ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் அணியினர் ஆகஸ்ட் 7 அன்று காலை 6.00 மணியளவில் சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் கருப்புசிவப்பு சீருடை அணிந்து தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

# ஊருக்கென்றே வாழ்ந்தவர் கலைஞர்!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு நாள் இன்று (7.8.2024). ஆறாவது ஆண்டு எனினும், நூறாவது ஆண்டு நினைவு நாள் எனினும், நீளுலகில் வாழும் தமிழ் நெஞ்சங்களிலெல்லாம் என்றும் நீக்கமற நிறைந்திருப்பவர் கலைஞர்.

கழக உடன்பிறப்புகளுக்கு, கலைஞர் நினைவுநாள் என்பது, அவர் மறைந்ததால் ஏற்பட்ட ஒரு குறியீடு மட்டும்தான்; நாட்காட்டி உணர்த்திடும் அடையாளம் மட்டும்தான். ஆனால் அவர் மறைந்தாலும், கழகத்திற்கு உள்ளும் புறமும், சதா சர்வ காலமும் நினைவு கூரப்பட்டு, அழியாத ஓவியமாய், கலையாத காவியமாய், சிறிதும் சிதையாத செம்பொன் சிற்பமாய் நிலைத்து, சற்றும் நில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறார்,அனைவரையும் இயக்கிக் கொண்டிருக்கிறார்.

**பக்தர்களின் ஆழ்மன வெளியில், "உருவாய் அருவாய், உளதாய் இலதாய் மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க் கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க் குருவாய்" வரும் பரம்பொருளைப் போல, கலைஞர்தம் தாசர்களுக்கு, எல்லாப் பொருளுமாய் இருந்து வருகிறார்!**

தமது அரசியல் ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவைப் போற்றிடவும், அவரது புகழ்ப் பெயர் எந்நாளும் நிலைத்திருக்கவும், கலைஞர் அவர்கள், எப்படியெல்லாம் எண்ணியெண்ணி, பார்த்துப் பார்த்துச் செயலாற்றினாரோ, அதைப் போலவே **திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியின் மூலமாகவும், கழகத்தின் மூலமாகவும், கலைஞரின் நினைவைப் போற்றிடும் எண்ணற்ற காரியங்களை தமிழ்நாடு முழுவதும் ஆற்றிக் கொண்டிருக்கிறார்.**

**திராவிடச் செம்மல்களான பெரியார் - அண்ணா - கலைஞர் ஆகியோர்க்கு 'மரணம்' என்பதேது ? அதனால்தான் 'மறைவு' என்று சொல்கிறோம். அத் திராவிட மூவர் குறித்து, பொது வெளியில்,நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ தொடர்ந்து பேசப்படுகிறார்கள் என்பதே, அவர்கள் மூர்த்தி மறைந்தாலும் மெய்க் கீர்த்தி மேதினியில் உயிர்த் துடிப்புடன் உலா வருவதைக் காட்டவில்லையா ?**

**கலைஞரின் 'பூத உடல்' போய்விட்டாலும், 'புகழ் உடல்' நமது நினைவின் நிழலில் ஜோதியாய் நின்று நிரந்தர ஒளி வீசிக்கொண்டே இருக்கிறது.**

இதுவரை எத்தனையோ சான்றோர் பெருமக்கள், பல்வேறு சந்தர்ப்பங்களில், கலைஞர் அவர்களைப் பற்றி ஏற்றிப் போற்றி எழுதியிருக்கிறார்கள்; எனினும் எழுதுவதற்கு இன்னும் இருக்கிறது என்பதுதான் உண்மை. கலைஞர் தீரா ( inexhaustible ) எழுத்து; வற்றாக் கடல் ! கலைஞர், எழுத்தின் தலை எழுத்தையே இயற்றிக் கொடுத்தவர். அவர் எழுத்தில் இல்லாததில்லை; சுவை ஊறும் வகையில் அவர் எடுத்துச் சொல்லாததில்லை.

**கலைஞர், தமிழுக்காகவே வாழ்ந்தவர்; தமிழ்ச் சமூக மேம்பாட்டுக்காகவே வாழ்ந்து, "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று, அனைத்தையும் அனைவர்க்கும் செய்தவர். போப் ஆண்டவர் ஃப்ரான்சிஸ் குறிப்பிட்டதைப் போல, "மற்றவர்களுக்காக வாழ்வதே இயற்கையின் நியதி" என்பதற்கேற்ப, நிறை வாழ்வு வாழ்ந்தவர் கலைஞர்.**

" ஆறுகள், அவற்றில் ஓடும் தண்ணீரைத் தாமே அருந்துவது இல்லை; மரங்கள், தாம் விளைக்கும் கனிகளைத் தாமே சுவைப்பது இல்லை; சூரியன், தன் ஒளியைத் தன் மீதே பாய்ச்சிக் கொள்வது இல்லை; மலர்கள், தம் மணத்தைத் தம் மீதே பரப்பிக் கொள்வது இல்லை. அதைப்போல, மற்றவர்களுக்காக வாழ்வதே இயற்கையின் நியதி" என்பது போப் ஆண்டவர் வாக்கு.

கலைஞர் தமது 13-14 வயதில், 1937 -38லேயே "தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!" என்று தொடங்கி, "தற்கால திராவிட நாடு, ஜாதி என்ற வலையில் சிக்கி, திராவிடரது கலை, நாகரீகம் எல்லாவற்றையும் சிற்சில மூட நம்பிக்கைகளால் இழந்து தத்தளித்துக் கொண்டிருக்கிறது (செல்வ சந்திரா)" என்று எழுதியிருக்கிறார். மற்றவர்களுக்காக - திராவிட நாட்டுக்காக வாழத் தொடங்கியவர் - கவலை கொண்டவர் கலைஞர் என்பது இந்தத் தொடக்கத்திலிருந்து புலனாகிறதன்றோ!

பதினெட்டாவது வயதில், அண்ணா அவர்களின் "திராவிட நாடு" 8-ஆவது இதழில் ( 26.4.1942 ) வெளியிடப்பட்ட "இளமைப் பலி" என்னும் படைப்பில், பொருந்தாத் திருமணம், கைம்பெண் துயரம், ஆண் - பெண் சமத்துவம் என்பன குறித்தெல்லாம் பேசி இறுதியில்,

**"ஏ, தமிழா! உனது பகுத்தறிவு எங்கே போய்ப் பதுங்கி விட்டது? பெண்ணுலகத்தின் கதியை நீ ஏன் கவனிக்கவில்லை? எத்தனை நாளைக்குப் பிறர்க்கு அடிமையாக வாழப் போகின்றாய்? எத்தனை நாளைக்குச் சுயமரியாதை அற்று வாழப் போகின்றாய்? எத்தனை நாளைக்கு மூட வைதீகத்தில் உழலப் போகின்றாய்?"** என்று எழுச்சி பொங்க எழுதியதிலிருந்து, அவர் தமிழ் நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளப் பிறந்தவர் என்பதை மிக இளம் வயதிலேயே உணர்ந்திருந்தார் என்று நாம் அறிந்து கொள்கிறோம் தானே!

90 வயது அளவில் எழுதிய "மதத்தில் புரட்சி செய்த மகான் இராமானுஜர்" தொலைக்காட்சித் தொடரின் இறுதியில், இராமானுஜர் அறிவிப்பதாக கலைஞர் எழுதியிருப்பவை கருத்தில் கொள்ளத் தக்கவை.

**"உலகத்தோர் துன்பங்களைத் தம் துன்பமாக நினைத்திருப்போரே எம்மைச் சேர்ந்தவர்கள்.... சுயநல வாதிகளைக் கண்டால் பாம்பு, தேள், கொடிய மிருகங்கள் என்று ஒதுங்கி இருங்கள்.... பிறர்க்காகவும், சமுதாய ஒற்றுமைக்காகவும் வாழ்பவனே போற்றப்படுவான்" போன்ற வசனங்கள் இராமானுஜரின் வாழ்க்கையை மட்டுமல்லாமல், கலைஞரின் வாழ்வியல் அணுகுமுறையையும் பிரதிபலிக்கின்றன.**

சொல் மற்றும் சிந்தனையோடு நின்றுவிடாமல்; - கலைஞர், தமிழ் நிலத்தை அய்ந்து முறை ஆட்சி செய்யும் வாய்ப்புகளில் - பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களுக்காகவும், மகளிர் - மாற்றுத் திறனாளர்கள் - திருமங்கையினர் போன்றோர்க்காகவும், ஒடுக்கப்பட்டோர் மற்றும் ஓரங்கட்டப் பட்டோர்க்காகவும், எந்தப் பிரிவினரையும், எந்தப் பகுதியையும் ஒதுக்கிவிடாமல், அனைவரது நல்வாழ்வு மற்றும் மேம்பாட்டுக்காகவும் திட்டங்களைத் தீட்டி, ஊக்கத்துடன் செயலாக்கப் படுத்தியவர் என்பது ஒரு நீண்ட வரலாறு!

கலைஞரை நினைக்கும் போதும், அவரது திருஉருவப் படத்தைப் பார்க்கும் போதும், அவர் எழுதிய பாடத்தைப் படிக்கும் போதும், அவருடைய ஆட்சிச் செயல்பாடுகளை எண்ணும் போதும், பலருக்கும்,

**"ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்**
**யாருக்கென்று அழுதபோதும் தலைவனாகலாம்**
**உறுதியோடு மெழுகு போல ஒளியை வீசலாம்**
**மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம் !"**

என்ற கவியரசர் கண்ணதாசன் அவர்களின் சிந்தனை வரிகள் செவிகளில் இசைக்கும். தமது நண்பரின் அந்த வரிகளுக்கு வாழ்நாள் விளக்கம் ஆனவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

• • •

**கி.இராஜமாணிக்கம்**

• • •